செ.வெ.எண்.06 நாள்.05.12.2017.

திருநெல்வேலி மாவட்டம், நாராணம்மாள்புரம் பேரூராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், நாராணம்மாள்புரம் பேரூராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.12.2017) அதிகாலையில் வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தூய்மையாக இல்லாத டீ கடைகள், ஹோட்டல்கள் மற்றும் வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார்.

நாராணம்மாள்புரம் பேரூராட்சி 9ம் நம்பர் பேருந்து நிறுத்தம், ரயில்வே பீடர் ரோடு, அருணாச்சால நகர், அரசு உயர்நிலைப்பள்ளி பகுதி, சத்திரம்குடியிருப்பு பகுதி ஆகிய பகுதிகளில் சுகாதாரத் துறை மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் மூலம் செய்யப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

நீண்ட நாட்களாக பூட்டப்பட்டுள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி, வீடுகளை திறந்து கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணியாளர்களிடம் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணிகளை மிகுந்த கவனத்துடன் சிறப்பாக பணியாற்ற வேண்டுமெனவும், டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளிலும் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். மேலும், அப்பகுதி பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டெங்கு விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தார்.

ஆய்வின் போது, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், வட்டாட்சியர் திரு.கணேசன், பேரூராட்சி செயல் அலுவலர் திரு.வெங்கடேசன், சுகாதார அலுவலர் திரு.ராஜகணபதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.